**பக்கம்.**

**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.**

**அசல் வழக்கு எண்.292/2023**

**வா.சா.– 2. காளிமுத்து – , த/பெ.காமாட்சி**

**நாள். 07.03.2026**

**வா.சா.2 இன்று ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :–**

தாவா வழக்கில் சாட்சியம் அளிப்பதற்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை எதுவும் வரவில்லை. வாதி அழைத்ததால் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். எதற்காக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தாவா புரோ நோட்டில் சாட்சி கையொப்பம் போட்டுள்ளதால் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை நான் சொல்லி தயார் செய்யப்பட்டதா என்றால் நான் சொல்லிதான் தயார் செய்யப்பட்டது. பிரதிவாதி தாக்கல் செய்த எதிருரை பற்றிய விவரம் தெரியும். பிரதிவாதி பாலசுப்பிரமணியன் என்னை யார் என்று தெரியாது என்று எதிருரையில் சொல்லியுள்ள விவரம் எனக்கு தெரியும். நான் நரிப்பட்டியில் குடியிருப்பதற்கான ஆவணம் எதையும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. ஆனால் இருக்கிறது. வாதி முருகேசன் நானும் ஒரே ஊரில் இருப்பதால் அவரை 10 ஆண்டுகளாக தெரியும். வாதிக்கு வயது 86 இருக்கும் என்றால் சரிதான். வாதி என்ன வேலை பார்க்கிறார், அவருடைய வருமானம் மற்றும் அவருடைய பணம் இருப்பு விவரங்கள் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. வாதியின் மகன் சக்திவேலிடம் நான் 7,8 வருடங்களாக வேலை பார்க்கிறேன். சக்திவேல் பிரதிவாதி மீது தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு எண். 298/2023 விவரம் பற்றி தெரியும். அசல் வழக்கு எண். 298/2023 வழக்கில் பிரதிவாதிக்கு ரொக்கமாக ரூ.50லட்சம் கடன் கொடுத்ததாகவும் அதற்குரிய புரோநோட்டில் எழுதியதில் நான் சாட்சி கையொப்பம் போட்டுள்ளேன் என்றால் சரிதான். அது என்னிடம் காண்பிக்கப்படுவது தான். அந்த புரோநோட்டு **பி.வா.சா.ஆ.1.** ஆகும். தாவா புரோநோட்டு மற்றும் மேற்கூறிய அசல் வழக்கு எண். 298/2023 எண்ணில் ஏற்படுத்திய புரோநோட்டு கொரோனா காலத்தில் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான். இந்தவழக்கில் முதல் சாட்சி முருகேசன் சாட்சியம் அளித்து சென்ற விவரம் தெரியும். வாதி அவர் சாட்சியம் அளித்த போது காளிமுத்து வா.சா.ஆ.1ல் கையெழுத்து போடவில்லை என்றும் பெயர் மட்டுந்தான் எழுதியிருக்கிறது என்று சாட்சியம் அளித்திருக்கிறார் என்பதால் நான் கையெழுத்து போடவில்லை என்று சொன்னால் சரியல்ல. கையெழுத்து போட்டுள்ளேன். என் பெயரும், கையெழுத்தும் ஒரே மாதிரிதான் இருக்கும். வாதி நான் கையெழுத்து போடவில்லை என்றும் பெயர் மட்டுமே

எழுதியுள்ளேன் என்று சொன்னால் அது பொய். வா.சா.ஆ.1 புரோநோட்டில் உள்ள கையெழுத்தும், அசல் வழக்கு எண். 298/2023ல் உள்ள காளிமுத்து கையழுத்தும் வித்தியாசமாக உள்ளது என்றால் சரிதான். ஆனால் நான்தான் இரண்டையுமே எழுதினேன். நான் எனது வங்கி பரிவர்த்தனை செய்யும் போது இவ்வாறுதான் கையெழுத்து செய்வேன். வா.சா.ஆ.1 புரோநோட்டில் ரெவென்யூ ஸ்டாம்பில் பாலசுப்பிரமணியன் என்ற கையெழுத்தும், அதன் கீழே அவருடைய கையெழுத்தும் வெவ்வேறாக உள்ளது என்றால் சரியல்ல. வாதி சாட்சியம் அளிக்கும் போது புரேநோட்டை பிரதிவாதி அவர் வீட்டில் வைத்து எழுதியதாக சொல்லியுள்ளார் என்பதால் நான் வாதி வீட்டில் வைத்து புரோநோட்டை எழுதியதாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. பிரதிவாதியை எனக்கு நேரடியாக பழக்கம் இல்லை என்றால் பழக்கம் உண்டு. அவரை 10,20 ஆண்டுகளாக தெரியும். பாலசுப்பிரமணியன் எனக்கு உறவினர் கிடையாது. ஒரே கட்சிக்காரர். பிரதிவாதி குடும்பத்தினரையும் எனக்கு நன்கு தெரியும் என்றால் தெரியாது. அசல் எண். 298/2023ல் உள்ள புரோநோட்டில் பாலசுப்பிரமணியன் என்று உள்ளது என்றாலும் இந்த வழக்கில் உள்ள புரோநோட்டில் பாலசுப்பிரமணி என்று உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1. ல் எழுதிய சாட்சி மணிகண்டன் என்று கண்டுள்ளது. அதன் கீழே உள்ள மணிகண்டனின் விவரங்களை அவர்தான் எழுதினார். மணிகண்டன் முகவரி எழுதிய கையெழுத்துக்கும் மணிகண்டன் எழுதிய புரோநோட்டில் மேல் உள்ள சங்கதிகளுக்கும் Hand writting மாறுபடுகிறது என்றால் சரிதான். நான், வாதி, மணிகண்டன் பழனி ஆகியோர்கள் ஒரே சமூகத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.1. புரோநோட்டு , அசல் வழக்கு எண். 298/2023 ல் உள்ள புரோநோட்டுக்கள் 1மாத இடைவெளியில் ஏற்படுத்தப்பட்டது என்பதால் ரூ.50 இலட்சமும், ரூ.65இலட்சமும் கடனாக பெற்றிருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. பணத்தை கொடுத்த பின்புதான் கையெழுத்து பெறப்பட்டது. நரிப்பட்டி என்பது நானும், வாதியும் குடியிருக்கும் சின்ன கிராமம்தான். வாதி வீட்டில் ரூ.1 கோடியே 15 லட்சம் ரொக்க வைத்திருக்க வாய்ப்பில்ல என்றால் சரியல்ல. வாதியும் அவரது மகன் சக்திவேலும் ஒரே வீட்டில் குடியிருக்கிறார்களா என்றால் இல்லை. கீழ் வீட்டில் ஒருத்தரும், மேல் வீட்டில் ஒருத்தரும் இருக்கிறார்கள். 24.01.2021 அன்று பிரதிவாதி உண்மையில் கடன் வாங்கவில்லை என்றாலும் தாவா புரோநோட்டை என் முன்னிலையில் எழுதி கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. மணிகண்டனை எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் பிரதிவாதிதான் கூட்டி வந்தார், அவர் எனக்கு பழக்கம் இல்லை. மணிகண்டன் என்ன வேலை பார்க்கிறார் என்ற விவரம் தெரியாது. வாதி பிரதிவாதியிடம் பணம் பறிக்க வேண்டும் என்று தாவா வழக்கை தாக்கல்செய்துள்ளார் என்றாலும் நான் வாதியிடம் வேலை பார்ப்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை இல்லை.</u>**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.03.07 18:32:11 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.